இந்த முதலமைச்சர் பதவி என்பது, என்னைப் பொறுத்தவரையில், நான் அடிக்கடி சொல்வதுண்டு. தலைவர் கலைஞர் அவர்கள் என்ன சொல்லியிருக்கிறார்கள் என்றால், 'பதவியைப் பதவியாகப் பார்க்காதே–பதவியைப் பொறுப்பாகப் பார்; அப்போதுதான் பொறுப்போடு பணியாற்ற முடியும்' என்று அடிக்கடி எனக்கு அறிவுரை சொல்லியிருக்கிறார்கள். ஆகவேதான், அதைப் பொறுப்போடு, நான் அதைப் பொறுப்பாகக் கருதி, பொறுப்பை ஆற்றிக் கொண்டிருக்கிறேன் என்ற அந்த உறுதியை இந்த நேரத்தில் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

இந்த இடத்திலே முதலமைச்சராக இருந்து, ஆட்சியை நடத்தி, சமுதாயத்திற்காக, இந்த நாட்டிற்காக உழைத்திருக்கக்கூடிய பெருந்தலைவர் காமராசர் அவர்களாக இருந்தாலும், பேரறிஞர் அண்ணா அவர்களாக இருந்தாலும், நம்முடைய முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களாக இருந்தாலும், கலைஞர் அவர்களுடைய இனிய நண்பராக இருந்த மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். அவர்களாக இருந்தாலும், அவர்களெல்லாம் ஆற்றியிருக்கக்கூடிய அந்தப் பணிகளை நான் ஒருக்காலும் மறந்திடமாட்டேன். ஆகவே, அவர்கள் வழிநின்று என்றைக்கும் நான் என்னுடைய கடமையை ஆற்றுவேன்; ஒரே வரியில் சொல்ல வேண்டுமென்றால், 'உங்களில் ஒருவனாக' இருந்து என்னுடைய கடமையை ஆற்றுவேன். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, வாழ்த்திய அத்தனை பேருக்கும் மீண்டும் ஒரு முறை நன்றி, நன்றி, நன்றி!

பிற்பகல் 1–00

4. தகவல் கோரல்

(அ) கன்னியாகுமரி மாவட்டம், ஏ.வி.எம். கால்வாய், தூர்வாருதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ராஜேஷ் குமார் அவர்கள்.

திரு. செ. ராஜேஷ் குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை வாழ்த்தி, வணங்குகிறேன். கன்னியாகுமரி மாவட்டத்தில் நீர்வழிப் போக்குவரத்தாகப் பயன்பட்டுவந்த பூவாரம் முதல் நீரோடித்துறை, இறையுமன்துறை, தேங்காய்ப்பட்டணம், தொட்டில்பாடு, சைமன்காலனி, மண்டைக்காடுபுதூர் வரை சுமார் 27 கி.மீ.

[திரு. செ. ராஜேஷ் குமார்] [2022 மே 7

உள்ள ஏ.வி.எம். கால்வாய் நீண்ட நெடுங்காலமாகப் பயன்படுத்தப்பட்டு வந்தது. அந்தக் கால்வாய் இன்றைக்கு முற்றிலும் முட்புதர்கள் வளர்ந்து ஆக்கிரமிக்கப்பட்டு, பழைய பாலங்களெல்லாம் புதிய பாலங்களாக அமைக்கப்படாமல், பக்கச் சுவர் கட்டப்படாமல், தூர் வாரப்படாமல் இருக்கின்றது. 27 கி.மீ. தூரம் உள்ள ஏ.வி.எம். கால்வாய் முழுவதுமாகத் தூர் வாரித் தரப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அரசின் கவனத்தை ஈர்த்து அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏ.வி.எம். கால்வாய் ஒரு காலத்தில் நீர்வழிப் போக்குவரத்திற்குப் பயன்படுவதாக இருந்தது. அதில் பாய்மரக் கப்பல்களெல்லாம் போகும். சரக்குகளையெல்லாம் அதில் ஏற்றிக்கொண்டு போவார்கள். கேரள மாநிலத்திலிருந்து இங்கு வந்து போய்க்கொண்டு இருந்தது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல, இடையிலே பராமரிப்பு இல்லாமல் அந்தக் கால்வாய் தூர்ந்துபோய் இருக்கிறது. அதனால், அதை மீண்டும் செப்பனிட்டு, மறுபடியும் நீர்வழிப் போக்குவரத்தினை ஏற்படுத்த வேண்டும் என்ற எண்ணத்தோடு, ஏற்கெனவே முடிவு செய்து,* estimate *தயாரித்து வைத்திருக்கிறோம். கிட்டத்தட்ட ரூ.1,300, 1,400 கோடி என்று* estimate *கொடுத்திருக்கிறார்கள். அதை முழுவதுமாக நிறைவேற்ற வேண்டுமானால். . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது தயவுசெய்து மற்ற எல்லோரும் அமைதியாக இருந்தால் நன்றாக இருக்கும் என்று நினைக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்களின் கவனத்திற்கு, பேரவை நிகழ்ச்சிகள்* live *ஆகப் போய்க்கொண்டிருக்கிறது.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களுடைய கருணை இருந்தால் அது நிச்சயமாக நிறைவேற்றித் தரப்படும். (குறுக்கீடு) தேர்தல் அறிக்கையில் இருக்கிறது. ஆனால், அதைச் செய்வதற்கு நிதி வேண்டும் அல்லவா? தேர்தல் அறிக்கையில் சொல்லப்பட்டிருப்பதால்தான் அதற்கான* estimate *தயாரித்து,* ready *ஆக வைத்திருக்கிறோம்.*